***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No.200/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | தனலெட்சுமி |
| *Father/Husband's Name* | க/பெ. பாஸ்கரன் |
| *Village* | காரக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போனது எனது இளைய மகன் ஆவார்.

கடந்த 19.12.2022ம் தேதியன்று காலை 08.00 மணிக்கு கீழையூர் மெயின் ரோட்டில் உள்ள கண்ணகி சாப்பாட்டு கடைக்கு எனது இளைய மகன் அகல்யன் அவருடைய இருச்சக்கர வாகனத்தில் டிபன் வாங்குவதற்காக சென்றுள்ளார். எனது மகன் கடையில் இருந்து டிபன் வாங்கிய பிறகு வரும்போது தஞ்சாவூரில் இருந்து தக்காளி ஏற்றிக்கொண்டு வந்த டாடாஏசி வாகனம் வேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் என் மகன் வந்த வாகனத்தின் மீது மோதியது. தகவல் கேள்விப்பட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகனின் பின்பக்க தலையில் அடிப்பட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தத. பின் ஆம்புலன்சு மூலமாக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு என் மகன் இறந்து விட்டதாக கூறினார்கள். விபத்தை ஏற்படுத்தியது டாடா ஏசி வாகன ஓட்டுநர் தான். நீதிமன்றத்தில் இருக்கும் ஆஜர் எதிரி தான் என்று கூறினார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கண்ணகி ஓட்டலில் இருந்து எங்களது வீடு தஞ்சாவூர் பக்கமா மேற்கு பக்கத்தில் உள்ளது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் ரோடு இரண்டு வாகனங்கள் எதிர் எதிராக ஒரே நேரத்தில் பயணிக்ககூடிய இரட்டை ரோடு என்றால் சரிதான். கண்ணகி ஓட்டல் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும்போது சாலையின் இடது புற ஓரத்தில் கண்ணகி ஓட்டல் உள்ளது என்றால் சரிதான். இறந்து போன எனது மகனுக்கு 16 வயது. எனது மகன் 10ம் வகுப்பு படித்துவிட்டு கொராண என்பதால் மேல்படிப்பு படிக்காமல் வீட்டில் இருந்துவிட்டார்.

காலையில் 08.00 மணிக்கு நான் வீட்டில் இருக்கும் போது சம்பவம் குறித்து பக்கத்து வீட்டிற்கு தகவல் வந்து என்னிடம் சொன்னார்கள். அதன் பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்று பார்த்த தபிறகுதான் அடிப்பட்ட எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் ஆம்புலன்சில் சென்றேனா என்றல் இல்லை. என்னை வடுவூர் காவல் நிலையத்திற்கு சம்பவ இடத்தில் இருந்து அழைதது சென்றுவிட்டார்கள். என் மகன் ஓட்டிய வாகனம் அங்கு கிடந்ததா என்பதை நான் பார்க்கவில்லை. தக்காளி வண்டி அங்கே கிடந்தது. அந்த இடத்தில எவ்வளவு பேர் இருந்தாரகள் என்றால் ஊரே கூடி கூட்டமாக இருந்தாரகள். என்னை யார் வடுவூர் காவல் நிலையத்திற்கு காரில் அழைத்து சென்றார்கள் யார் என்று எனக்கு பதட்டத்தில் தெரியாது. புகாரை யார் எழுதினாரகள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எழுதிய புகாரில் என்னிடம் கையெழுத்து போடசொல்லி வாங்கி கொண்டார்கள். நான் ஆஜர் எதிரியை இன்று தான் முதன் முதலாக நீதிமன்றத்தில் வைத்து பார்க்கிறேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் பெயர், தந்தை பெயர், முகவரி குறித்து தெரியுமா என்றால் தெரியாது.

புகார் கொடுத்த பிறகு எத்தனை முறை வந்து போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் மறதியாக உள்ளது. விசாரணையில் இறந்துபோன எனது மகன் 16 வயது என்றும், 10 ம் வகுப்பு முடித்துவிட்டு வீட்டில் உள்ளார் என்றும் சொல்லியுள்ளேன். எனது மகனின் வயது உறுதிப்படுத்தும் ஆவணங்களை கேட்டு பெற்று க்கொணடாரா என்றால் ஆதார் அட்டையை கேட்டு பெற்றுக்கொண்டார். என் மகன் யாருக்காக டிபன் வாங்க சென்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

என் மகன் ஓட்டிய வண்டி யாருடையது என்பது தெரியுமா என்றால் தெரியும். என் வீட்டில் இருந்து மூன்றாவது வீட்டில் உள்ள ரகுவரன் வீட்டின் வண்டி ஆகும். மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் எனது மூத்த மகன் அகத்தியன் ஆம்புலன்சில் அடிப்பட்ட என் மகனை அழைத்து சென்றார் என்றால் சரிதான்.

என் மகன் விபத்து ஏற்பட்டு இறந்த சம்பவத்திற்கும், எதிரிக்கும் அவரது வாகனத்திற்கும் எந்தவிதமான தொடர்பு இல்லை என்றும், வாகன ஓட்ட தகுதியற்ற எனது மகன் வாகனத்தை தாறுமாறாக ஓட்டி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று மீண்டும் என் வீடு இருக்கும் அடுத்த ரோட்டை சாலை விதிகளை பின்பற்றி கடக்காமல் அஜாக்கிரதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், இறந்த எனது மகனுக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவம் மறைக்கப்பட்டு காவல் துறையினர் என்னை புகார்தாரராக ஜோடித்த பொய் வழக்கில் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் பேரில் முதன் முதலாக எதிரி தான் தக்காளி வண்டியை ஓட்டினார் தற்போது கூறிகிறேன் என்றும் , வழக்கில் சொல்லப்பட்ட வாகனத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்றால் சரிய்லல.

நான் முதல் விசாரணையில் சொன்ன தக்காளி வண்டியின் பதிவு எண் எதுவும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது குறத்து நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.200/2025 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | ராஜேந்திரன் |
| *Father/Husband's Name* | ரத்தினம் |
| *Village* | காரக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 59 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன்.

கடந்த 19.12.2022 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் நான் பஸ் ஏறுவதற்காக கீழையூர் ரோடு பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். அப்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி விபத்தில் இறந்து போன நபர் இருச்சக்கர வாகனத்தில் வந்தார். காய்கறி ஏற்றிக்கொண்டு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த லோடு வண்டி ஸ்பீடாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து இருச்சக்கர வாகனத்தில் வந்த நபரின் மீது மோதியது. மேற்படி வண்டி ஹாரன் அடித்திருந்தால் இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் தள்ளி சென்றிருப்பார். நாங்கள் ஓடிபோய் சென்று பார்த்தபோது இருச்சக்கர வாகனத்தில் வந்த நபரின் தலை முழுவதும் அடிப்பட்டு இருந்தது. இரத்தம் வந்தது. மேற்படி காய்கறி வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திவிட்டு ஆஜர் எதிரி கிழக்கு நோக்கி ஓடிவிட்டார். பிறகு சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்சு வந்தவுடன் நானும், அங்கிருந்தவர்களும் விபத்தில் அடிப்பட்டவரை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் சம்பவ குறித்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 08.30 மணியளிவல் நான் சம்பவஇடத்தில் இருக்கும்போதே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலீசார் வருவதற்கு முன்பாகவே காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைதது சென்றுவிட்டார்கள். அப்போது சம்பவ இடத்தில் வைத்து என்ன நடந்தது என்று ஏட்டைய்யா விசாரித்தார்கள். அதன் பிறகு இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தாரகளா என்றால் இல்லை. சம்பவஇடத்தில் ஏட்டைய்யா விசாரித்தபோது காய்கறி வேனை நிறுத்திவிட்டு கிழக்கு புறமாக ஓடிய விபரத்தை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். காயம்பட்டவர் ஓட்டிய இருச்சக்கர வாகனம் சம்பவ இடத்திலேதான் கிடந்தது. நான் அத்துடன என் வேலையாக சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் இருந்த இரண்டு வாகனங்களையும் போலீசார் எடுத்து சென்றார்கள் என்கிற விபரம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் சரிதான்.

என்னிடம் போலீசார் விசாரித்தபோது இருச்சக்கர வாகனம் மற்றும் காய்கறி வண்டியின் பதிவு எண் குறித்து சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலே எனக்கு காய்கறி வண்டியில் இருந்து ஓடியதாக சொல்லும் நபரின் பெயர், தந்தை பெயர், முகவரி குறித்து எனக்கு தெரியாது. அது குறித்து போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் எதற்காக அந்த இடத்திற்கு வந்தார் என்று எனக்கு தெரியுமாஎ ன்றால் கண்ணகி மெஸ்ஸிக்கு டிபன் வாங்க வந்ததாக சொன்னார்கள். நான் நின்று கொண்டிருந்த பஸ் ஸ்டாப்பிற்கு அடுத்த வீடு தான் கண்ணகி மெஸ் இருக்கிறது.

நான் போலீசாரிடம் பஸ்ஸிக்காக பஸ் ஸ்டாப்பில் நின்றதாக தான் சொன்னேன். என்னுடன் சம்பவ இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெரியுமாஎ ன்றால் 10 க்கு மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள். கண்ணகி மெஸ்ஸிக்கு அடுத்த கடைக்காரர்களும் இருந்தார்கள். காயம்பட்ட நபர் சம்பவ இட்த்தில் இருக்கும் போதே அவரது அம்மா வந்துவிட்டார். காயம்பட்டவருடன் அவரது அம்மாவும் ஆம்புலன்சில் சென்றுவிட்டார். காயம்பட்ட நபர் என் ஊர்க்காரரர் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 14,15 வயது தான் இருக்கும்.

நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், ஓட்டுவதற்கு தகுதியற்ற சிறார் ஆன காயம்பட்டவர் வாகனத்தை தாறுமாறாக ஒட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், இறந்ததற்கு நஷ்டஈடு பெற்று தரவேண்டும் என்ற நோக்கில் போலீசார் உருவாக்கி கொடுத்த பொய் வழக்கில் நான் கண்ணுற்ற

சாட்சியாக ஜோடிக்கப்பட்டு சொல்லிக்கொடுத்தின் அடிப்படையில் முதல் விசாரணை சாட்சியத்தை அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*
## *CC.No.200/2025 – P.W. 3 (LW3)*

| | |
|---|---|
| *Name* | கோபி |
| *Father/Husband's Name* | சாமிக்கண்ணு |
| *Village* | காரக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 39 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன்.

கடந்த 19.12.2022 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் நான் மன்னார்குடி வருவதற்காக எடக்கீழையூர் ரோடு பஸ்ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது விபத்தில் இறந்த பையன் இருச்சக்கர வாகனத்தில் கண்ணகி ஓட்டலில் டிபன் வாங்கி கொண்டு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தபோது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த Ashok Leyland வாகனம் தக்காளி ஏற்றிக்கொண்டு வேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் பைக்கில் மோதியது . மோதியதில் இருச்சக்கர வாகனத்தில் வந்த பையன் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டது. இரத்தம் வந்தது. பிறகு நான் அந்த பையனின் பெரியஅப்பாவிற்கு போன் மூலமாக விபத்து குறித்து தகவல் அளித்தேன். பிறகு அவர்கள் வந்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அந்த பையனை அழைத்து சென்றார்கள். மேற்படி தக்காளியை ஏற்றிக்கொண்டு வந்த Ashok Leyland வாகனத்தை ஓட்டிவந்த விபத்தை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரி தான். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காரக்கோட்டை கிராம பஞ்சாயத்து போர்டு கிளார்க் என்றால் சரிதான். என்னை போலீசார் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று மாலை சுமார் 05.00 மணியளவில் விபத்து நடந்த இடத்தில் வைத்து என்னை போலீசார் விபத்து குறித்து முதன் முதலாக விசாரித்தார்கள். அப்போது நான் எடக்கீழையூர் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி பஸ் ஸ்டாப்பும், கண்ணகி மெஸ்ஸும் அடுத்தடுத்து உள்ளது என்றால் சரிதான்.

தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி செல்லவேண்டும் என்று சொன்னால் இரட்டை ரோட்டில் பஸ் ஸ்டாப் மற்றும் கண்ணகி மெஸ் வாசலில் உள்ள மேற்கு கிழக்கான ரோட்டில் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். கண்ணகி மெஸ்ஸில் டிபன் வாங்கினாலும் தஞ்சாவூர் நோக்கி செல்லவேண்டும் என்றால் கண்ணகி மெஸ் வாசலில் உ்ளள ரோட்டிற்கு தென்புறம் உள்ள அடுத்த ரோடு மாறி தான் மேற்கு நோக்கி செல்லவேண்டும் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தை ஓட்டியவர் இளவர் என்றால் சரிதான். எதிரியினுடைய பெயர், அப்பா பெயர், முகவரி குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அது குறித்து போலீசாரிடம் நான் சொல்லவில்லை என்றாலும் சரிதான். காயம்பட்டவர் சம்பவ இடத்தில் இருக்கும்போதே அவரது அம்மா, அண்ணன் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவரை அவரது அம்மா, அண்ணன் ஆம்புலன்சு மன்னார்குடி மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டாரகள் என்றால் சரிதான்.

மேற்படி விபத்திற்கும், வழக்கில் குறிப்பிடப்பட்ட நான்கு சக்கர வாகனத்திற்கு எந்த சம்பந்தமில்லை என்றும், வாகனத்தை ஓட்ட தகுதியற்ற நபர் வாகனத்தை தாறுமாறாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், இறந்தவர் குடும்பத்திற்கு நஷ்டஈடு பெற்று தரவேண்டும் என்பதற்காக இறந்துபோனவரின் முழுமையான நிலவரம் வழக்கில் மறைக்கப்பட்டு ஜோடிக்கப்பட்ட வழக்கில் ஊர்க்காரர் என்பதாலும், பஞ்சாயத்து போர்டு கிளார்க் என்பதாலும் புகார்தாரருக்கு ஆதராவக நான் போலீசாரால் கண்ணுற்ற சாட்சியாக ஜோடிக்கப்பட்டு ஆவணத்தில் குறிப்பிட்டு இருந்தததை சொல்லிக்கொடுத்ததின் பேரில் முதல் விசாரணை சாட்சியத்தை அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.200/2025 – P.W. 4 (LW16)***

| | |
|---|---|
| *Name* | முரளி சிறப்பு உதவி ஆய்வாளர்<br>தேவங்குடி காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *58* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது தேவங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 19.12.2022 ம் தேதியன்று வடுவூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது 09.30 மணிக்கு காரக்கோட்டை வடக்கு தெருவை சேர்ந்த பாஸ்கரன் மனைவி தனலெட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலையக்குற்ற எண்.305/2022 இதச பிரிவுகள் 279,337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல்தகவல் அறிக்கை **அசாஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையும் புகார் மனுவும் 9 நாட்கள் இந்நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பப்பட்டதற்கு ஏதேனும் விசேச காரணம் உண்டா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் ஆவணங்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் அதனால்தான் மிக மிக காலதாமதம்

என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் நிலையம் ஆஜராகி புகார் கொடுக்கும்போது அவருடன் யார் வந்தார்கள் என்றால் வந்தார்கள் யார் என்ற விவரம் தெரியாது. என் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார்களா அல்லது எழுதி எடுத்து வந்தார்களா என்றால் எழுதி எடுத்து வந்தார்கள்.

2) புகார்தாரர் நிலையம் ஆஜரான நேரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்கொடுப்பதற்கு முன்பாக வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் போன் மூலம் காரக்கோட்டை மெயின்ரோட்டில் விபத்து என்றுதான் தகவல் கிடைக்கப்பெற்றது. மற்றபடி சம்பந்தப்பட்ட வாகனம் குறித்தோ, நபர்கள் குறித்தோ புகார் வாங்கும்போது தெரியாது, அதன் பிறகு சம்பவ இடம் சென்றபிறகுதான் அது குறித்த விவரம் தெரியவந்தது. நான் புகாரை பெற்ற உடனேயே கணினியில் பதிவு செய்து உடனடியாக ஆய்வாளர் பார்வைக்கு மேல் விசாரணைக்கு வைத்து விட்டேன் என்றால் சரிதான்.

3) புகார் மனுவில் புகார்தாரர் விபத்தை ஏற்படுத்திய எதிரியின் பெயரையோ, முகவரியையோ குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு அதன் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்க கோரியிருக்கிறார் என்றால் சரிதான். நான் எதன் அடிப்படையில் புகாரில் இல்லாத பெயரையும், தகப்பனார் பெயரையும், முகவரியையும் எதிரி என்கிற காலத்தில் குறிப்பிட்டு தெரிவித்திருக்கிறேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்ன முறையில் புகாரும் பெறப்படவில்லை , முதல் தகவல் அறிக்கையும் பதிவுசெய்யப்படவில்லை. அவைகள் அனைத்தும் காலதாமதமாக நடைபெற்ற சம்பவத்தை மறைத்து நஷ்டஈடு பெறுவதற்காக காலஅவகாசமாக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.